செய்தி வெளியீடு எண்:819 நாள்:21.12.2007

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் தெரு விளக்குகள், குடிநீர் விநியோகம், ஆகிய அடிப்படை தேவைகளை கிராம ஊராட்சிகள் பராமரித்து வருகின்றன. இதற்கான மின் கட்டணமாக முன்பு மின்சார வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூபாய் 1.60 வீதம் செலுத்தப்பட்டது. ஆனால், முந்தைய ஆட்சியில் 1.12.2001 முதல் இந்தக் கட்டணம் ரூபாய் 3.40 என உயர்த்தப்பட்டது. இதனால், கிராம ஊராட்சிகளின் நிதிச் சுமை அதிகரித்து வருவாயில் பெருமளவு மின்கட்டணமாக செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை என்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இந்த அரசு மே 2006ல் பொறுப்பேற்றபோது மின்சார வாரியத்திற்கு கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின்கட்டண நிலுவைத் தொகை ரூபாய் 220 கோடி என்ற அளவில் இருந்தது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மாவட்ட வாரியான ஆய்வு கூட்டங்களின் போதும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார பரவலாக்கம் செய்வது குறித்து அரசுக்கு பரிந்துரை வழங்கிட அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்ற போதும் மேலும், மண்டல அளவிலான ஊராட்சி மன்ற தலைவர்கள் கருத்தரங்குகளிலும் மின் கட்டணம் செலுத்துதல், அபராத வரி, புதிய மின் கம்பங்கள் அமைப்பதற்கான கூடுதல் செலவினம் ஆகிய பிரச்சனைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஊராட்சி மன்ற தலைவர்களால் தெரிவிக்கப்பட்டன. இந்த பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து இவற்றிற்கு உரிய தீர்வு காண மாண்புமிகு மின்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோர் துறை உயரதிகாரிகளுடன் 13.3.2007 அன்று இப்பொருள் குறித்து ஆய்வு செய்தனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கான மின் கட்டணத்தை ரூபாய் 3.40லிருந்து ரூபாய் 3 ஆக குறைத்தும், அபராத வட்டியை 12 சதவிகிதத்திலிருந்து 6 ஆக குறைத்தும் கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசத்தை 20 நாட்களில் இருந்து 60 ஆக உயர்த்தியும், புதிய மின்கம்பம்பங்கள் அமைத்திட நிலையான கட்டணமாக ரூபாய் 7,500 என நிர்ணயித்தும், அரசு உத்தரவிட்டுள்ளது. 12.4.2007 முதல் மின்கட்டணம் குறைக்கப்பட்டதால், ஊராட்சிகளுக்கு ரூபாய் 10.58 கோடி சேமிப்பு கிடைத்தது. நிலுவையில் இருந்த அபராத வட்டித் தொகை ரூபாய் 18.46 கோடி முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டது.

2007–08ஆம் ஆண்டில் மட்டும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் சாதனை அளவாக 1.50 லட்சம் புதிய தெருவிளக்குகள் நிறுவப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் கட்டப்பட்ட 16 ஆயிரம் புதிய வீடுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தவிர, 3 லட்சத்து 30 ஆயிரம் மின் இணைப்புகளுக்கு மின் அளவு மீட்டர்கள் பொருத்தப்பட்டு புதிய மின்கட்டண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மின் நுகர்வு அளவுடன் கூடிய மின்கட்டண பட்டியல்கள் வழங்கப்படுகின்றன. அரசு மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக மே 2006 வரை ஊராட்சிகள் செலுத்த வேண்டியிருந்த ரூபாய் 220 கோடி நிலுவைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. தற்போது செப்டம்பர் 2007 வரையான மின் கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி 8லிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டதாலும், அதில் ஊரக உள்ளாட்சிகளுக்கான 58 சதவீத ஒதுக்கீட்டில் கிராம ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிதி47 லிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதாலும், கூடுதல் நிதி கிடைப்பதால் கிராம ஊராட்சிகளின் வருவாயிலிருந்து மின் கட்டணத்திற்காக இதுவரை 70 சதவீதம் செலவிட்ட நிலை மாறி இனி 40 சதவீதம் மட்டுமே இவ்வினத்திற்கு செலவாகும். எனவே, இனிவரும் காலங்களில் கிராம ஊராட்சிகள் தமது மின்கட்டணம் குறித்த நிதிச்சுமையின்றி வளர்ச்சிப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள இயலும். நீண்ட நெடுங்காலமாக நிலவிய மின் கட்டணம் தொடர்பான இந்த பிரச்சினைகள் தற்போது அரசால் தீர்க்கப்பட்டுள்ளன. இது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் சாத்தியமாகி உள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**